மாவட்ட திட்ட ஒருங்கிணைப்பாளர் மற்றும் முதன்மைக்கல்வி அலுவலர் அவர்களின்

செயல்முறைகள் ந.க.எண் : /ஒபக/2021-22 நாள்: 11.08.2021

பொருள் : ஒருங்கிணைந்த பள்ளிக்கல்வி – 2021-22 – அரசுப்பள்ளி ஆசிரியர்களுக்கு இணைய வழியாக அடிப்படை கணினி பயன்படுத்துதல், EMIS, Hi-Tech lab மற்றும் ICT ஆகியவற்றில் திறன் வளர் பயிற்சிக்கான கால அட்டவணை அனைத்து மேல்நிலைப்பள்ளி தலைமையாசிரியர்களுக்கும் தெரிவித்தல் - சார்ந்து

பார்வை : மாநில திட்ட இணை இயக்குநர் அவர்களின் செயல்முறைகள் ந.க எண்: 1845/அ11/பயிற்சி/SS/2021. நாள்:06.08.2021

ஆசிரியர்களுக்கு தொடர்ந்து கற்றல், அறிவை புதுப்பித்தல் ஆகியன மிகவும் அவசியம் என்பதால் ஒவ்வொரு ஆண்டும் பணியிடைப்பயிற்சி ஒருங்கிணைந்த பள்ளிக் கல்வி மற்றும் மாநில கல்வியியல் ஆராய்ச்சி மற்றும் பயிற்சி நிறுவன மூலம் வழங்கப்பட்டு வருகிறது.

மேற்காண் பார்வையில் கண்டுள்ள கடிதத்திற்கேற்ப வேலூர் மாவட்டத்தில் உள்ள மேல்நிலைப்பள்ளிகளில் பணிபுரியும் முதுகலை ஆசிரியர்களுக்கு திறன் வளர் பயிற்சி அளிக்க திட்டமிடப்பட்டு முதற்கட்டமாக 400 ஆசிரியர்கள் தெரிவு செய்யப்பட்டு 12.08.2021, 13.08.20121, 16.08.2021, 17.08.2021 மற்றும் 18.08.2021 ஆகிய தேதிகளில் தேர்ந்தெடுக்கப்பட்ட மையங்களில், மையத்தின் பொறுப்பு ஆசிரியர் முன்னிலையில் மாவட்ட முதன்மை கருத்தாளர்கள் உதவியுடன் பயிற்சி அளிக்க திட்டமிடப்பட்டுள்ளது.

பயிற்சியில் கலந்துகொள்ள வேண்டிய முதுகலை ஆசிரியர்கள் மற்றும் பயிற்சி மையங்களின் விவரங்கள் இத்துடன் இணைக்கப்பட்டுள்ளது. வேலூர் மாவட்ட அரசு மேல்நிலைப்பள்ளி தலைமை ஆசிரியர்கள் பதிவிறக்கம் செய்து தகவல்களை முதுகலை ஆசிரியர்களுக்கு தெரிவித்து நாளை (12.08.2021 ) முதல் அந்தந்த மையங்களில் பயிற்சியில் பங்கேற்க செய்ய வேணுமாய் கேட்டுக்கொள்ளப்படுகிறார்கள்.

பயிற்சிமைய தலைமையாசிரியர்கள் தங்கள் பள்ளியிலுள்ள உயர் தொழிற்நுட்ப ஆய்வகத்தை தூய்மைப்பணியாளர்களை கொண்டு தினமும் சுத்தப்படுத்தி, கிருமிநாசினி தெளித்து பயிற்சி சிறந்த முறையில் நடைபெற ஒத்துழைப்பு நல்குமாறு கேட்டுக்கொள்ளப்படுகிறார்கள். நிலையான covid தடுப்பு நடைமுறைகளை கண்டிப்பாக பின்பற்றி பயிற்சிகள் நடைபெறுதலை சார்ந்த தலைமையாசிரியர்கள் உறுதிசெய்தல் வேண்டும்.

for மாவட்ட திட்ட ஒருங்கிணைப்பாளர் &

முதன்மைக்கல்வி அலுவலர் , வேலூர்

பெறுநர்:

1. அனைத்து மேல்நிலைப்பள்ளி தலைமையாசிரியர்கள்